புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்

**<u>பொருள் : 1</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி 2019–20ல் கீழ்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.1469/2019/அ3 நாள் 04.10.2019–ம் தேதிய நடவடிக்கைகளின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.10.2019 அன்று முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>விழுக்காடு</th></tr>
<tr><td>1.</td><td rowspan="2">புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஜெ.ஜெ நகரில் அங்கன்வாடி மையம் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி செய்தல்</td><td rowspan="2">1.50 இலட்சம்</td><td>திரு.சிதம்பரம் புன்செய்ப் புளியம்பட்டி</td><td>0.01% மதிப்பீட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர்</td><td>0.01% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக வழங்கியுள்ள திரு.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1518/2019/இ1)**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 1075

**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 2**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16ல் சந்தைக்கடை பகுதியில் நுண்ணுயிர் உரமாக்கம் மையம் கட்டப்பட்டு தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. இக்கட்டித்தில் 3TPD குப்பை அரைக்கும் அளவில் Shredding Machine நிறுவகப்பட்டுள்ளது. MCC-ல் உள்ள அரைக்கும் இயந்திரம் Shredding Machine –ல் ஏதேனும் பழுதுகள் ஏற்படும் போது மக்கும் குப்பைகளை கையாலுவதிலும், உரமாக்குவதிலும் தொய்வு ஏற்படுகிறது. எனவே குப்பைகளை தங்கு தடையின்றி கையாளுவதற்கும், உரமாக்குவதற்கும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016-ன் படி அறிவியல் முறையில் அகற்ற செய்ய Spare Shredding Machine ஒன்று உடனடியாக தேவைப்படுவதாலும், பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு **தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 விதி–15ன் கீழ்** விலைப்புள்ளி பெற்று, பணி உத்தரவு வழங்கி, பணி முடித்து, தொகை வழங்கியதற்கு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1662/2019/இ1)**

**அலுவலக குறிப்பு:–**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் :** 1076

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்**

பொருள் : 3

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி 2019–20ல் கீழ்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.1469/2019/அ3 நாள் 04.10.2019–ம் தேதிய நடவடிக்கைகளின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.10.2019 அன்று முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்புநோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி காந்தி நகரில் அங்கன்வாடி மையம் சுற்றுச்சுவர் கட்டுதல் பணி செய்தல் | 1.00 இலட்சம் | திரு.சிதம்பரம் புன்செய்ப் புளியம்பட்டி | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | | | வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் | 0.01% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக வழங்கியள்ள திரு.சிதம்பரம், புன்செய்ப் புளியம்பட்டி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1518/2019/இ1)**

**அலுவலக குறிப்பு :**
மன்றம் ஏற்கலாம்.
**தீர்மான எண் :** 1077

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக் கூட்ட தீர்மான நகல்**

<u>பொருள் : 4</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதி 2019–20ல் கீழ்கண்ட பணி மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் ஈரோடு அவர்களின் ந.க.எண்.1469/2019/அ3 நாள் 04.10.2019–ம் தேதிய நடவடிக்கைகளின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு 31.10.2019 அன்று முதல் அழைப்பில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி இந்திரா நகரில் அங்கன்வாடி மையம் கட்டுதல் பணி செய்தல் | 8.50 இலட்சம் | வி.பி.என் பில்டர்ஸ் திருப்பூர் | 4.95% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2. | | | திரு.சிதம்பரம் புன்செய்ப் புளியம்பட்டி | 7.00% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டை விட 4.95% அதிகமாக வழங்கியுள்ள வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்தப்புள்ளியை குறைத்துத்தர கடிதம் 31.10.2019ல் வழங்கப்பட்டதற்கு, வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக செய்வதாக ஒப்புதல் வழங்கியுள்ளார். ஏனவே மதிப்பீட்டை விட 0.01% குறைவாக பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி வழங்கியள்ள வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1518/2019/இ1)**

**அலுவலக குறிப்பு :**

மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 1078

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 14.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 5**

புன்செய்ப்புளியம்பட்டி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP-2019-2020)-ன் கீழ் வார்டு எண்.10, காந்தி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் பேவர் பிளாக் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க 12.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெற்றப்பட்டது. அன்றே பெறப்பட்ட தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது.

அதில் தகுதி வாய்ந்த,

1. திருவாளர்கள்.வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர்
2. பூமிகா இன்ப்ரா டெவலப்பர்ஸ், சத்தியமங்கலம்

ஆகியோரின் விலைப்புள்ளிகள் 14.11.2019–ல் வருகை புரிந்த ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீடுகள் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ளனர்.

| வ.எண் | ஒப்பந்ததாரர் | விகிதம் |
|---|---|---|
| 1 | திருவாளர்கள்.வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் | 4.98% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | பூமிகா இன்ப்ரா டெவலப்பர்ஸ், சத்தியமங்கலம் | 7.12% மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக (Price Bid) வழங்கியுள்ளார். திருவாளர்கள்.வி.பி.என் பில்டர்ஸ், திருப்பூர் அவர்களின் மேற்படி பணி திட்டப்பணியாக உள்ளதாலும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள காலதாமதமாகும் என்பதாலும், ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 880/2019/இ1)**

**அலுவலக குறிப்பு :** மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் :** 1079

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 20.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 1**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்கண்ட விவரப்படி உள்ள நான்கு அரசுப் பள்ளிகளில், துப்புரவு பணி மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்து பராமரிப்புப் பணி மேற்கொள்ள, ஆறு துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த முறையில் பணி செய்ய திரு.வி.ஜெயரா, ஒப்பந்ததாரருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண் அ1/1298/2017 நாள்06.11.2017–ல்,20.11.2017 முதல் இரண்டாண்டு காலத்திற்கு இப்பணியினை செய்ய உத்திரவிடப்பட்டு உள்ளது. மேற்படி இரண்டாண்டு ஒப்பந்த காலம் 19.11.2019 உடன் முடிவடைவதால், தற்பொழுது பணிபுரிந்து வரும் ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் ஒப்பந்ததாரருக்கு பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி மேலும் 20.11.2019 முதல் 31.03.2020 வரை ஒப்பந்தத்தை நீடிப்பு செய்து துப்புரவு பணிகள் மேற்கொள்ள தனிஅலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 1298/2017/எச்1)

**அலுவலகக்குறிப்பு :**

**1.**அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 1080

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 20.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின்அவசரக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 2**

அரசாணை (நிலை) எண். 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 19.11.2019–ன்படி 2018–19 முதலாம் அரையாண்டு முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்பட்டதை, நிறுத்தி வைக்கப்பட்டு, குழு அமைத்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க கீழ்க்காணும் விவரப்படி தெரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள அரசாணை (நிலை) எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 19.07.2018 –ன்படி கீழ்க்கண்டவாறு 2018–19 முதலாம் அரையாண்டு முதல் சொத்து வரி சீராய்வு மேற்கொள்ள உத்தரவிடபட்டிருந்தது.

| வ.எண். | விவரம் | சொத்து வரி சீராய்வு செய்யப்படுவது |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடங்கள் | 50% மிகாமல் |
| 2 | வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் | 100% மிகாமல் |
| 3 | குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் | 100% மிகாமல் |

மேலும் அரசாணை (நிலை) எண். 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 26.07.2018 –ன்படி ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண். 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை நாள் 19.07.2018 –ல் தெரிவிக்கப்பட்டுள்ள பத்தி எண். 4 வரிசை எண். 2 –ல் வாடகை குடியிருப்பு கட்டிடங்கள் 100% என்று உள்ளதை நீக்கம் செய்யப்பட்டு திருத்தம் செய்து ஆணை வெளியிடப்பட்டிருந்தது.

மேலும் நகராட்சி அதிகாரிகளால் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே உள்ள வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களில் தற்போது விரிவாக்க பணிகள் செய்து கட்டப்பட்ட கட்டிடங்களுக்கும், கட்டிட உபயோகம் மாற்றம் செய்யப்பட்ட கட்டிடங்களையும் ஆய்வு செய்து அதன்படி தற்போது உள்ள பரப்பளவிற்கு ஏற்றவாறு 2017–18–ல் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் பொது நல சங்கங்கள், வர்த்தகதாரர்கள் சங்கங்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் அதிகபட்ச சொத்துவரி உயர்வை மறுபரிசீலனை செய்ய கோரியுள்ளபடியும், பல வர்த்தக நிறுவனங்கள் 100% உயர்வு செய்யப்பட்ட குடியிருப்பு அல்லாத கட்டிடங்களை தற்போது உள்ள பொருளாதார நிலைக்கு ஏற்றாவாறு குறைவு செய்யக் கோரியதையும் மாண்புமிகு. நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்ட செயலாக்க அமைச்சர் அவர்களால் 8.7.2019 –ல் சட்டமன்றத்தில் உயர்த்தப்பட்ட சொத்துவரியினை குழு அமைத்து பரிசீலிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளர், பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர்களைக் கொண்டு குழு அமைத்து அறிக்கை அளிக்கவும் அதுவரை சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 885/2018/அ2)

**அலுவலகக் குறிப்பு :** தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மான எண் :** 1081

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 29.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் : 1</u>**

திரு.ஆர்.சுப்பையன் என்பவர் இந்நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண் 5 ஐ 2003-2004 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு 31.03.2016 ஆம் ஆண்டு வரை மேற்படி கடையை ஏலத்தில் எடுத்து, தொடர்ந்து கடையை நடத்தி, இக்கடைக்கான வாடகை தொகையினை நிலுவையின்றி செலுத்தியுள்ளார்.

மேற்படி கடையை 2016-2017 ஆம் ஆண்டில் கடைகளுக்காக நடத்தப்பட்ட பொது ஏலத்தில் கலந்து கொண்டு திரு.பி.சண்முகசுந்தரம் என்பவர் 01.04.2016 ஆம் ஆண்டு முதல் 31.03.2019 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கடையை நடத்தி, இக்கடைக்கான வாடகை தொகையினை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். தொடர்ந்து மேற்படி கடையை 01.04.2019 ஆம் ஆண்டு முதல் குத்தகையை புதுப்பித்து தொடர்ந்து கடையை நடத்தி வருகிறார்.

திரு.ஆர்.சுப்பையன் என்பவர் மேற்படி கடைக்கு செலுத்திய வைப்புத் தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே, இந்நகராட்சியின் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் மேற்படி, குத்தகைத்தாரர் பெயரில் உள்ள வைப்புத்தொகை ரூ.36552/- யை திரும்ப வழங்க, தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1583/2019/அ1)

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 1082

**தீர்மானம் :** அனுமதிக்கலாம்

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 29.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் : 2</u>**

திரு.A.பாலசுப்பிரமணியம் என்பவர் இந்நகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர் வணிக வளாக கடை எண் 13 ஐ 2003-2004 ஆம் ஆண்டு முதல் 2015-2016 ஆம் ஆண்டு 31.03.2016 ஆம் ஆண்டு வரை மேற்படி கடையை ஏலத்தில் எடுத்து, தொடர்ந்து கடையை நடத்தி, இக்கடைக்கான வாடகை தொகையினை நிலுவையின்றி செலுத்தியுள்ளார்.

மேற்படி கடையை 2016-2017 ஆம் ஆண்டில் கடைகளுக்காக நடத்தப்பட்ட பொது ஏலத்தில் கலந்து கொண்டு திருமதி.கே.சசிகலா என்பவர் 01.04.2016 ஆம் ஆண்டு முதல் 31.03.2019 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து கடையை நடத்தி, இக்கடைக்கான வாடகை தொகையினை நிலுவையின்றி செலுத்தியுள்ளார். தொடர்ந்து இக்கடையை நடத்த இயலாத காரணத்தால், 31.03.2019 ஆம் தேதி அன்று மேற்படி கடையை நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டார். தற்சமயம், மேற்படி கடைக்கு 01.04.2019 ஆம் ஆண்டு முதல் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன் வரவில்லை.

திரு.A.பாலசுப்பிரமணியம் என்பவர் மேற்படி கடைக்கு செலுத்திய வைப்புத் தொகையை திரும்ப வழங்க கோரியுள்ளார். எனவே, இந்நகராட்சியின் காலங்கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் மேற்படி, குத்தகைத்தாரர் பெயரில் உள்ள வைப்புத்தொகை ரூ.46780/- யை திரும்ப வழங்க, தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1582/2019/அ1)

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 1083

**தீர்மானம் :** அனுமதிக்கலாம்

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய் புளியம்பட்டி நகராட்சி 29.11.2019–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்**

**பொருள் : 3**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14ல் புல எண்கள் 7/1ஏ, 7/2ஏ, 7/3ஏ, 7/4ஏ ல் 4.97 ஏக்கர் பரப்பு கொண்ட மனையில் குடியிருப்பு மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு ஊரக நகரமைப்பு பிரிவு துணை இயக்குநர், சேலம் மண்டலம்

மற்றும் நகராட்சி ஆணையாளர் அவர்களால் ந.க.எண்.700/2014/அ1, நாள்.18.03.2016ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இம்மனையில் 16 தெருமின் விளக்கு கம்பங்கள் அமைக்கப்ட்டுள்ளன. அதில் 15 வாட்ஸ் மற்றும் 20 வாட்ஸ் கொண்ட LED தெரு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது. மேற்படி தெரு மின்விளக்குகளின் மின்கட்டணம் நகராட்சி சார்பில் செலுத்தவும், மின்சார வாரியத்திடம் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
அ)அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.700/2014/அ3)**

**தீர்மான எண் :** 1084

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

## புன்செய் புளியம்பட்டி நகராட்சி 29.11.2019—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் சாதாரணக் கூட்ட தீர்மான நகல்

<u>பொருள் : 4</u>

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,திருப்பூர் மண்டலம்,திருப்பூர்,நகர் ஊரைமப்பு துறை,குமரன் வணிக வளாகம் (முதல் தளம்) அவர்களின் கடிதம் ந.க.எண்.1293/2019/தி.ம.2 நாள்.07.11.2019-ன் படி, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி, புன்செய்ப் புளியம்பட்டி கிராமம் சர்வே எண்.க.ச.எண்.76/4B என்ற இடத்தில் 2.08 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவின் சாலை மற்றும் மின் பகிர்மானம் அமைப்பு வரைப்படம் மற்றும் பொது உபயோக இடத்துடன் கூடிய அமைப்பு வரைப்படத்தை (Road Pattern) ஒப்புதல் அளித்து அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின்படி சாலைகள்,பொது உபயோகம் ஆகியவற்றினை நகராட்சிக்கு தார் சாலை அமைத்தும் மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி மற்றும் மின் வசதிகள், தெரு விளக்கு வசதிகள் செய்து நகராட்சி தான ஆவணம் பத்திரப்பதிவு ஒப்படைக்கும் படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட வரைப்படத்தில் குறிப்பிடுள்ளபடி TANGEDCO —விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை அந்தத் துரைக்கே தான பத்திரம் மூலம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டு விவரம் தெரிவிக்குமாறு குறிப்பிட்டுள்ளது.

மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின்படி சாலை எண்கள் 1 முதல் 4 வரை உள்ள சாலைகளை வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சாலை எண்.1. 10.00m அகலத்திற்கும், சாலை எண்கள் 2 மற்றும் 3, 7.20 m அகலத்திற்கும், சாலை எண்.4.. 9.00m அகலத்திற்கும் மற்றும் வரைப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளபடி மூலை முடுக்குகள் குறிப்பிட்டுள்ள அளவுகளின் படி அமைக்கப்பட வேண்டும்.மேற்கண்ட சாலைகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளில் சட்டம் 1920 பிரிவு 177,178,179 மற்றும் 180-ன்படி பொறியாளர் அவர்களின் குறிப்பு பெற்று அவர்களின் அறிவுரைப்படி மனைப்பிரிவின் உரிமையாளர் தனது சொந்த செலவில் அடிப்படை வசதிகள் செய்து நகராட்சிக்கு நகர் மன்றத்தின் ஒப்புதல் பெற்று நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், அவர்களால் அங்கிகரிக்கப்பட்ட சாலை அமைப்பு (Road Pattern) வரைப்படத்தின் படி பூங்காவிற்காக 10.19% ஒதுக்கப்பட வேண்டும். அதற்கான தொகையினை பூங்கா பரப்பிற்கு உண்டான தொகை நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் அவர்களால் வழிகாட்டி மதிப்பு சார்பதிவாளர், புன்செய்ப் புளியம்பட்டி சார்பதிவாளர் அலுவலகம் கடிதம் ந.க.எண்.354/2019 நாள்.09.09.2019 மனுதாரருக்கு முகவரியிட்ட கடிதத்தின்படி வழிகாட்டி மதிப்பு பெற்று அதன்படி ரூ.28,58,000/-ஐ அரசுக்கணக்கில் செலுத்துமாறும் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1293/2019/தி.ம.1.நாள்.14.10.2019 அன்று மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு மனுதாரரால் அரசு கணக்கு தலைப்பு எண்.0127-60-800-AM-4512 நாள்.04.11.2019ன்படி பாரத ஸ்டேட் வங்கி, திருப்பூர் மெயின் கிளை, திருப்பூரில் செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட 10% பூங்கா ஒதுக்கீட்டிற்கான ஈடான வழிகாட்டி மதிப்புத்தொகை நகராட்சி பெயரில் செலுத்தப்படவில்லை. நகராட்சிக்கு நகர் ஊரமைப்பு துறையின் மேற்கண்ட தொகை ஏதும் பெறப்பட வில்லை.

மேற்கண்ட மனைப்பிரிவின் மனை உரிமையாளர் மூலம் நகராட்சிக்கு, செலுத்தப்பட வேண்டிய தொகையினை நகராட்சியின் கரூவூலத்தில் ரூ.87,415/-ல் இரசீது எண்.060/01//01/19-20/0010485. நாள்.01.10.2019ன்படி செலுத்தி அதன் விவரம் சமர்ப்பித்துள்ளளார்.

எனவே, மேற்கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1293/2019/தி.ம.2.நாள்.07.11.2019ன்படி அங்கீகரிக்கப்பட்ட சாலை வரைப்படத்தின்படியும் மற்றும் அதில் கண்டுள்ள நிபந்தனையில் குறிப்பிட்டுள்ளவாறு அரசானை 18 ந.நி.ம.கு.வ.துறை. நாள்.04.02.2019ன்படியும் மற்றும் இதர நிபந்தனைகளின் படியும் , நகராட்நி பொறியாளர் அவர்களின் குறிப்பு பெறப்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களால் நிர்ணயம் செய்யும், சாலையின் மட்டம், வடிகால் வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு மற்றும் மின் வசதி ஆகியன மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தான ஆவணப் பத்திரம் மூலம் பத்திரப் பதிவு செய்யப்பட்டு ஒப்படைப்பு செய்யவும், மேற்கண்ட அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தின்படி 32.15 ச.மீ. (0.5) இழ்கிளை TANGEDCO விற்கு தானமாக ஒப்படைக்கவும், மேலும் மேற்கண்ட பூங்கா ஒதுக்கீட்டிற்காக (10.19%) பூங்கா மதிப்பு தொகைக்கு ஈடான அரசு விதிப்படி மதிப்பு நகராட்சியின் மூலம் எவ்வித ஒப்புதலும் பெறப்படாமல் அரசு கணக்கில் செலுத்தவேண்டுள்ளது. எனவே, மேற்கண்ட தொகை குறித்து வித்தியாசம் ஏதேனும் நகராட்சியின் மூலம் தொகை நிர்ணயம் செய்யப்பட்டால் அந்த தொகையினை செலுத்தி விடுகிறேன் என மனைப்பிரிவு உரிமையாளர்களிடம் ரூ.100/- மதிப்பிலான பத்திரத்தில் உறுதி மொழி ஆவணம் பெறப்பட்டு மன்றத்தின் அனுமதி பெற்ற பின்னர் அங்கீகாரம் செய்யப்பட்ட சாலை அமைப்பு (Road Pattern) வரைப்படத்தின்படியும் அதில் கண்டுள்ள நிபந்தனைகள் படியும் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு பின்னர் தானப்பத்திரம் பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1.அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் :** 1085

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) எம். சிவக்குமார்,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.